ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2253/42 - 2021 නොවැම්බර් මස 12 වැනි සිකුරාදා - 2021.11.12
*2253/42 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*திருத்தப்பட்டவாறான 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகிய நான், இதனகத்துள்ள அட்டவணையின் I, II மற்றும் III ஆம் நிரல்களில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு பொருட்கள் தொடர்பாகவும், மேலே 3 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட 2019, மே 13 ஆந் திகதிய 2123/ 5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல், 2019, யூலை 10 ஆந் திகதிய 2131/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல், 2019, ஒற்றோபர் 14 ஆந் திகதிய 2145/ 12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2019, திசெம்பர் 01 ஆந் திகதிய 2151/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஆகியவற்றின் ஊடாகத் திருத்தப்பட்ட 2019, மாச்சு 05 ஆந் திகதிய 2113/ 9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் I ஆம் அட்டவணையிலுள்ள பொருட்கள் தொடர்பாக குறித்த அட்டவணையின் IV ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வரி விதிதங்கள், இதனகத்தே உள்ள அட்டவணையின் IV ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள உற்பத்தி வரி விகிதங்களைக் கொண்டு 2021, நவெம்பர் 13 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில், பதிலீடு செய்யப்படுதல் வேண்டும் என இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

**பசில் ராஜபக்ஷ,**
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2021, நவெம்பர் 12.*

1A - PG 5602 — 510 (2021/11)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை - ‘அ’**

| இ. மு. தலைப்பு I | இ. மு. குறியீடு II | விபரம் III | உற்பத்தி வரி IV |
|---|---|---|---|
| **24.02** | | **புகையிலையிலான அல்லது புகையிலைக்குப் பதிலானவையிலான சுருட்டுக்கள், செருட்கள், சிகாரில்லோக்கள் மற்றும் சிகரெட்டுகள்.** | |
| | 2402.20 | புகையிலையிலான சிகரெட்டுகள்: | |
| | 2402.20.20 | சிகரெட்டுக்கள், ஒவ்வொன்றும் 60 மி. மீற்றருக்குக் குறைவான நீளத்தைக் கொண்டவை. | தலா 1000 சிகரெட்டுக்களுக்கு ரூ. 6,750/- |
| | 2402.20.30 | சிகரெட்டுக்கள், ஒவ்வொன்றும் 60 மி. மீற்றருக்குக் கூடிய ஆனால் 67 மி. மீற்றருக்குக் கூடாத நீளத்தைக் கொண்டவை. | தலா 1000 சிகரெட்டுக்களுக்கு ரூ. 28,850/- |
| | 2402.20.40 | சிகரெட்டுக்கள், ஒவ்வொன்றும் 67 மி. மீற்றருக்குக் கூடிய ஆனால் 72 மி. மீற்றருக்குக் கூடாத நீளத்தைக் கொண்டவை. | தலா 1000 சிகரெட்டுக்களுக்கு ரூ. 41,100/- |
| | 2402.20.50 | சிகரெட்டுக்கள், ஒவ்வொன்றும் 72 மி. மீற்றருக்குக் கூடிய ஆனால் 84 மி. மீற்றருக்குக் கூடாத நீளத்தைக் கொண்டவை. | தலா 1000 சிகரெட்டுக்களுக்கு ரூ. 46,600/- |
| | 2402.20.60 | சிகரெட்டுக்கள், ஒவ்வொன்றும் 84 மி. மீற்றருக்குக் கூடிய நீளத்தைக் கொண்டவை. | தலா 1000 சிகரெட்டுக்களுக்கு ரூ. 51,800/- |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.